1993 மார்ச் 17]

111—

தாராபடவேடு மற்றும் காட்பாடி வி. ஜி. ராவ் நகர் பகுதிக்கு குடிநீர் வழங்கல்.

* 9367—திருமதி. கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதியில், தாராபடவேடு மற்றும் காட்பாடி வி. ஜி. ராவ் நகர் பகுதிக்கு குடிநீர் பிரச்சனையைத் தீர்க்க 135 இலட்சம் ஆகுமென்று குடிநீர் வடிகால் வாரியம் மதிப்பிட்டு அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், தாராபடவேடு மற்றும் காட்பாடி பேரூராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த திருத்திய மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி. கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து உள்ளார்கள். மிக்க நன்றி. வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்து விட்டதால் எங்கள் காட்பாடி தொகுதியில் மிகுந்த பிரச்சினைக்குள்ளான மேற்கண்ட இடங்களில், இந்த நிதி ஆண்டிலேயே முன்னுரிமை அளித்து இந்தச் செயல் திட்டத்தை நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் நிதி நிலையின் வசதிக்கேற்ப இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 112. திரு. இரா. புதுநயினார் ஆதித்தன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.